# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Al-Ain, UAE

# மன்னா..

ஒருவன் என் பின்னே வர விரும்பினால்,
அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை
எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்.

-மாற்கு:8:34

"If anyone would come after me, let him deny himself
and take up his cross and follow me"

-Mark:8:34

MARCH '2022

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| WED<br>8.00 pm | ASH WEDNESDAY<br>SPECIAL SERVICE<br>@Majlis Hall |
| SAT<br>5.00 PM<br>6.30 PM | CHILDREN'S BIBLE SCHOOL<br>GENERAL ASSEMBLY & BIBLE CLASSES<br>MRS. AUGUSTA LAWRENCE @ 056 641 1676 |
| SAT<br>7.45 PM<br>9.00 PM | 1 ST WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| SUN<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SUNDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN’S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN’S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 4TH FRIDAY OF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திரு பெயரில் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**"ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின.**
**2கொரிந்தியர்:5:17**

**"IF ANYONE IS IN CHRIST, HE IS A NEW CREATION. THE OLD HAS PASSED AWAY; BEHOLD, THE NEW HAS COME.**
**2CORINTHIANS:5:17**

தபசு நாட்களை லெந்து காலங்கள் என்று அழைக்கிறோம். Lent என்ற இலத்தீன் மற்றும் டச்சு வார்த்தைக்கு வசந்த காலங்கள் அல்லது துளிர்விடும் காலங்கள் என்பதாகும். லெந்து காலங்களில் சிலுவையை நோக்கி பார்க்கும்போது பழையன கழிந்து புதியன புகுகின்ற காலம் மற்றும் மாற்றத்தை உண்டாக்கும் காலம் ஆகும்.

*லெந்து காலம் கடவுளோடு நெருங்கி வாழ அழைக்கின்ற காலம்

*லெந்து காலம் மனிதர் கடவுளோடு உள்ள உறவை புதுப்பிக்கின்ற காலம்

*லெந்து காலும் கடவுளுக்கு பிரியமான அன்பின் செயல்களை நிறைவேற்றும் காலம்

*லெந்து காலம் இயேசுவின் நாற்பது நாள் சோதனையை நினைவு கூறுகின்ற காலம் (மாற்கு:1:13)

இப்படிப்பட்ட சிந்தனையோடு இந்த லெந்து காலங்களை அனுசரித்து ஆண்டவர் இயேசுவின் பாடு, மரணம், உயிர்த்தெழுதலை நினைவுக் கூற அழைக்கப்படுகிறோம்.

தொடர்ந்து கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகிற நம்முடைய ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். இந்த கொராண தொற்றுநோய் தொடர்ந்து நமது தேசங்களில் பரவி வருகிறது என்பதை நாம் அறிந்து வருகிறோம். இந்த இக்கட்டான காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும் குறிப்பாக வேலை இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்..

தொடர்ந்து நமது திருச்சபையில் Zoom வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, ஜெபிக்கவும் அழைக்கப்படுகிறோம்.

**லெந்து கால தின தியானம்**

இந்த மாதம்( மார்ச்) 2ஆம் தேதியிலிருந்து தபசு (லெந்து) காலங்களை திருச்சபை குடும்பமாய் அனுசரிக்க அழைக்கப்படுகிறோம். இந்த நாட்களில் தினமும் காலை:6:00 மணிக்கு லெந்து கால தின தியானம் நடைபெறும் திருச்சபை குடும்பத்தினர் ஜெபத்துடன் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறிர்கள்.

**விடுமுறை வேதாகம பள்ளி (VBS)**

இந்த மாதத்தில் நம்முடைய திருச்சபையில் உள்ள பிள்ளைகளுக்கு குறிப்பாக சிறுவர்களுக்கான விடுமுறை வேதாகம பள்ளி நடைபெறும். இந்த உன்னதமான திருப்பணிக்காக ஜெபிக்கும் படியாகவும், பெற்றோர்கள் பிள்ளைகளை உற்சாகமாய் ஆயத்தப்படுத்துமாறும், அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.




தொடர்ந்து திருச்சபையின் வளர்ச்சியிலும், ஊழியத்திலும்,திருச்சபை குடும்பங்களிலும், நமது பிள்ளைகளின் வாழ்விலும், கல்வியிலும் அவர்கள் எழுது இருக்கின்ற ஆண்டு இறுதித்தேர்வுகாகவும், எதிர்காலத்திற்காகவும் ஆண்டவர் அநேக ஆசீர்வாதங்களை கொண்டுவரும் படியாய் ஜெபிக்கும்படியாகவும். அழைக்கப்படுகிறோம்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்........

Rev.S.P.Baskar








**முன்னுரை**

லெந்து காலங்களில் சாம்பல் புதன் என்பது மிக முக்கியமாக கருதப்படுகிறது. லெந்து காலங்களில் நாற்பது நாள் அனுசரிப்பதின் தொடக்க நாளாக இந்த நாள் கருதப்படுகிறது. சாம்பல் புதனில் இருந்து நாற்பத்தி ஆறாம் நாளாக ஆண்டவர் இயேசுவின் உயிர்த்தெழுந்த திருநாளாக அனுசரிக்கப்படும். திருமறையில் இயேசு நாற்பது நாள் இரவும் பகலும் வனாந்திரத்தில் உபவாசம் (நொன்பு) இருந்தார் என்னும் நற்செய்தி கொடுக்கப்பட்டுள்ளது. இதனை நற்செய்தி நூல்களில் மத்தேயு, மாற்கு, லூக்கா சிறப்பாக இதனை எழுதியுள்ளார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசத்தோடு பின்பற்றுகிறவர்கள் இந்த நாற்பது நாட்கள் உபவாச த்திலும், ஜெபத்திலும் தங்களை அர்ப்பணிக்க லெந்து காலத்தின் தொடக்கமாக இந்த சாம்பல் புதன் நம்மை அழைக்கிறது.

இந்த லெந்து காலங்களில் நமக்கு மிக முக்கியமாக சிந்திப்பது சிலுவையைக் குறித்ததான சிந்தனையாகும்.

**சிலுவை கடவுளின் மக்களாக நம்மை இணைக்கிறது (1பேதுரு:3:18)**

**சிலுவை கடவுளின் அருகில் நம்மை நிறுத்துகிறது (எபேசியர்: 2:13)**

**சிலுவை என்பது புதிய தரிசனத்தை மனுக்குலத்திற்கு தருகிறது.**

(CROSS: A NEW VISION TO HUMANITY)

இந்த புதிய தரிசனத்தை சார்ந்து மனிதர் துன்பத்தின் மத்தியில் வாழும்போது நம்பிக்கை கொடுக்கக்கூடியாதாக சிலுவை அமைகிறது. பரிசுத்த பவுல் சிலுவையை குறித்து சொல்லும்பொழுது யூதர்களுக்கு ஒரு தடைக்கல்லாகவும், கிரேக்கர்களுக்கு பைத்தியமாகவும், ஆண்டவரை ஏற்றுக்கொண்டு விசுவாசத்தோடு வாழ்பவர்களுக்கு வல்லமையாகவும் இருக்கிறது என்பதை குறிப்பிடுகின்றார் (1கொரி:1:18,23) இன்றைக்கு இயேசு கிறிஸ்துவின் சீடர்களாக இருக்க வேண்டுமென்றால் நாம் சிலுவையை சுமந்து அவரைப் பின்பற்ற வேண்டும்.

அவ்வாறு பின்பற்ற வேண்டும் என்பது இயேசுவின் அரைகூவல் ஆகும். இதனை நற்செய்தி நூல்களில் மத்தேயு:10:38, மாற்கு:8:34, லூக்கா:14:27 இவற்றில் நாம் காண்கிறோம். பழைய மனிதராக சிலுவையில் அறைந்து விட்டு, புதிய மனிதர்களாக நாம் இயேசுவை பின்பற்ற அழைக்கப்படுகிறோம். இப்படிப்பட்ட புரிதலோடு சிலுவை என்பது நம்மை பயங்கரமான துன்பத்திற்கு அழைக்கிறது என்று புரிந்துகொள்ளாவும். இந்த சிந்தனையோடு சிலுவை நமக்கு கொடுக்கின்ற அழைப்பை சிந்திக்க அழைக்கப்படுகிறோம்...

**வெறுத்தல் (RESIGNATION)**

நற்செய்தி நூல்களில் இயேசுவின் அழைப்பு சீடர்களுக்கும் அவரை விசுவாசித்து ஏற்றுக்கொண்ட அனைவருக்கும். அழைப்பு என்பது ஆண்டவரின் அருட்கொடையாகும். இந்த அழைப்பு என்பது மனுக்குலத்தின் கையில் கொடுக்கப்படுகின்ற பொறுப்பு சார்ந்த செயலாகும். இந்த அழைப்பு என்பது அற்பணிப்பு சார்ந்த ஒன்றாகும். அற்பணிப்பு என்பது சாதாரணமான ஒன்று அல்ல அர்ப்பணிப்பு என்பது ஒரு மனிதரின் ஆள் தன்மை சார்ந்த ஒரு சிறப்பு நிகழ்வு ஆகும். இதில் உடல், உள்ளம், உறவு சார்ந்த ஈடுபாடு உலக வாழ்வில் வெளிப்படுத்தப்பட வேண்டும். இதில் ஒன்றில் குறைவு காணப்படும்போது அது ஒரு நிலையற்ற ஒரு செயல்பாடாக காணப்படும். அத்துடன் அது உண்மையான அழைப்பின் அர்ப்பணிப்பாக இருக்க முடியாது. எனவே சீடன் என்ற வார்த்தையின் ஆழத்தையும் அர்த்தத்தையும் ஆராய்ந்து பார்க்கும்போது. குருவை முழுமையாக பின்பற்றக்கூடிய ஒரு நபரே சீடன் என்று அழைக்கப்பட அர்ப்பணிப்பு உள்ளவர் என்ற தகுதி உடையவர் ஆவார். எனவே சீடர் என்பவருக்கு இருக்கவேண்டிய தகுதி என்பது அர்ப்பணிப்பில் உண்மையாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும். அற்பணிப்பு இல்லாமல் பாடுகளை ஏற்றுக் கொள்ள முடியாது, அதாவது சிலுவையை சுமக்க முடியாது எனவே அற்பணிப்பு முழுமை பெற வேண்டுமென்றால் கிறிஸ்துவின் சிலுவையை எடுத்துக்கொண்டு பின்பற்ற வேண்டும். அதைத்தான் இயேசு கிறிஸ்து வலியுறுத்துகிறார் விரும்புகிறார்.

**"ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக் கடவன்....**

**-மாற்கு:8:34**

"IF ANYONE WOULD COME AFTER ME, LET HIM DENY HIMSELF AND TAKE UP HIS CROSS AND FOLLOW ME.

-MARK:8:34

எனவே ஒருவர் கிறிஸ்துவின் அர்ப்பணிப்பின் அழைப்பை பெற்று அவருக்கு சீடராய் இருக்க வேண்டுமென்றால் தன்னை வெறுத்து கிறிஸ்துவின் சிலுவையை எடுத்துக்கொண்டு அவரை பின்பற்ற அழைக்கப்படுகிறோம்.

**எடுத்தல்(RESOLUTION)**

சிலுவையை எடுத்தல் என்பது சீடத்துவத்தின் முதன்மைப் பணியாகும். எடுத்தல் என்பதை குறித்து ஆராய்ந்து பார்த்தால் உலகத்தையும், உலகத்தை சார்ந்த அத்தனையும் துறந்து அல்லது வெறுத்து சிலுவையை மாத்திரம் எடுத்தல் என வலியுறுத்தப்படுகிறது. சிலுவையை எடுத்தபிறகு திரும்பிப் பார்த்தல் என்ற செயல்பாடு இருக்க கூடாது என்பதை வலியுறுத்துகிறது. நான் எடுக்கும் முடிவு, தீர்மானம் உறுதியானதாக இருக்கவேண்டும். முடிவு அல்லது தீர்மானம் எடுப்பதற்கு முன்பு அதன் விளைவுகளை அறிந்திருக்க வேண்டும். சிலுவையில் அழைப்பு என்பது துன்பத்தை, பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு கொடுக்கப்படும் அழைப்பு ஆகும். **"சிலுவை இன்றி சிம்மாசனம் இல்லை என்பது உண்மை"**
எனவே நாம் முயற்சி செய்யாமல் எதிலும் முழுமையை அடைய முடியாது என்ற தீர்மானத்துடன் இருக்க அழைக்கப்படுகிறோம். சிலுவை என்பது நம்முடைய வாழ்வில் பல பாடுகள் நிறைந்தது என்று புரிந்து கொண்டு சிலுவையை சுமக்க ஏற்றுக்கொள்ள அழைக்கப்படுகிறோம். எனவே எடுத்தல்(RESOLUTION) என்பது தெளிவான புரிதல் இருந்தால் மட்டுமே கிறிஸ்துவின் சிலுவையை எடுக்க முடியும் இதற்கு முழுமையான அர்ப்பணிப்புடன் எந்தவித பிரதிபலன் கருதாமல் தீர்மானம் எடுக்க அழைக்கப்படுகிறோம்.

**நடத்தல் (RESTRICTION)**

நடத்தல் என்பது மனுக்குலத்தின் வாழ்வில் நடைமுறையில் இருக்கவேண்டிய ஒன்றாகும். இதைக்குறித்து முதலாம் சங்கீதத்தில் நாம் அறிந்து கொள்ள முடியும். ஒருவர் ஆண்டவர்மீது விசுவாசம் கொண்டு தனது வாழ்க்கை பயணத்தை பயணிக்கும்போது, முழுமையான ஈடுபாட்டில் பிரதிபலிப்பாக வெளிப்படுத்தப்படும். ஆண்டவர் அளிக்கும் அழைப்பை அர்ப்பணிப்பின் மூலமாக முழுமையான தீர்மானம் எடுத்தால், ஆண்டவரின் வழியில் நடந்தால், ஆண்டவரை நேசித்தால், அந்த மனிதர் எங்கு உட்காருவார், நிற்பார், எப்படி நடப்பார் என குறிக்கப்பட்டுள்ளது. இது உண்மையான, முழுமையான ஈடுபாட்டிற்கு, அடையாளமாகும். பரிசுத்த பவுல் திருச்சபைக்கு சொல்லுவது என்னவென்றால் **"பக்தியுள்ள ஆராதனை என்பதற்கு அவர் தரும் இலக்கணம் போலியான ஈடுபாடும், மாய்மாலமான ஈடுபாடும் உள்ள சூழ்நிலையில் நாம் ஆண்டவருக்கு உண்மையாக நடந்து அவருடைய சிலுவையை சுமக்கும் சீடராக இருக்க அழைக்கப்படுகிறோம்"**

என்று தூய பவுல் கிறிஸ்துவுக்குள் எப்படி நடக்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்கிறார். இயேசு கிறிஸ்துவின் திருப்பணியில் இணைத்துக் கொள்பவர்கள், சிலுவை என்பது பாடுகளையும், துன்பத்தையும் ஏற்றுக்கொள்ள வலியுறுத்துகிறது என்பதை சிலுவையின் வழியாக புரிந்துக்கொள்ள அழைக்கப்படுகிறோம் இயேசு கிறிஸ்து சிலுவையை நமக்காக தியாகம் கொண்டு அன்பு வைத்து அதை ஏற்றுக்கொண்டு சிலுவையை எடுத்தல் என்பது சீடத்துவத்தின் முதன்மைப் பணியாகும். எடுத்தல் என்பதை குறித்து ஆராய்ந்து பார்த்தால் உலகத்தையும், உலகத்தை சார்ந்த அத்தனையும் துறந்து அல்லது வெறுத்து சிலுவையை மாத்திரம் எடுத்தல் என வலியுறுத்தப்படுகிறது. சிலுவையை எடுத்தபிறகு திரும்பிப் பார்த்தல் என்ற செயல்பாடு இருக்க கூடாது என்பதை வலியுறுத்துகிறது. நான் எடுக்கும் முடிவு, தீர்மானம் உறுதியானதாக இருக்கவேண்டும். முடிவு அல்லது தீர்மானம் எடுப்பதற்கு முன்பு அதன் விளைவுகளை அறிந்திருக்க வேண்டும். சிலுவையில் அழைப்பு என்பது துன்பத்தை, பாடுகளை ஏற்றுக்கொள்வதற்கு கொடுக்கப்படும் அழைப்பு ஆகும்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்

Rev.S.P.Baskar






**முன்னுரை**

கொடிய பஞ்சகாலத்தில் உயிர் பிழைக்க யோசேப்பினால் எகிப்துக்கு கொண்டுவரப்பட்ட யாக்கோபின் புத்திரர்களில் "லேவியும்" ஒருவன். அந்த லேவிக்கு தனது முதிர் வயதில் எகிப்தில் பிறந்த மகள்தான் "யோகெபேத்" ஆவார். இந்த யோகெபேத் லேவியின் மகனான "கோகாத்தின்" மகன் "அம்ராவை" திருமணம் செய்தார் இவர்களுக்கு மிரியாம் என்ற மகளும், ஆரோன் என்ற மகனும் பிறந்தார்கள் (யாத்:6:20) அதைத்தொடர்ந்து அடிமைத்தனம், கொடிய பஞ்சம் எகிப்து தேசத்தில் வந்தது. இந்தநிலையில் எகிப்தில் பிறக்கும் ஆண் குழந்தைகள் கொலை செய்ய புதிய சட்டம் எகிப்தின் அரசர் கொண்டு வந்தார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தான் "மோசே" பிறந்தார்.

## யோகெபேத்தின் விசுவாச வாழ்வு

### 1. பார்க்கும் விசுவாசம்:

யோகெபேத் ஒரு ஆண் பிள்ளையைப் பெற்று அது அழகுள்ளது என்று கண்டு அதை மூன்று மாதம் ஒளித்து வைத்தார் (யாத்:2:2) அம்ராம், யோகெபேத் தம்பதியினர் தன் பிள்ளைகள் கடவுளில் வாரிசு என்று நம்பினார்கள். தாயும், தகப்பனும் கடவுளுக்கு முன்பாக நின்று பிள்ளைகளைப்பார்க்கிறார்கள். தாயும், தகப்பனும் அந்த பிள்ளையை அழகுள்ளது என்று காண்கிறார்கள். இப்படி பார்ப்பதால் கடவுளின் அழகு பிள்ளையின் முகத்தில் பிரகாசித்தது. கடவுளின் திட்டம் அந்த குழந்தையின் மூலம் நிறைவேற தொடங்கியது. இந்த திட்டத்தில் தாயும், தகப்பனும் தங்களை இணைத்துக் கொண்டார்கள்.



### 2. பிரச்சனைகளை எதிர்கொள்ளும் விசுவாசம்:

மோசேயின் பிறப்பின் காலத்தில் ஏற்பட்ட பிரச்சனையை யோகெபேத் ( யாத்:2:3 ) அந்த குழந்தையை ஒளித்து வைக்க கூடாமல் நாணற்பெட்டியை எடுத்து அதற்கு பிசினும், கீலும் பூசி அதிலே பிள்ளையைக் கிடத்தி நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தார். கடவுள் என் பிள்ளையைப் பாதுகாத்துக் கொள்வார் என்ற விசுவாசத்துடன் இதை செய்தார்.

### 3. பயத்தைபுறம்பாக்கும் விசுவாசம்:

கடவுளின் பெயரில் யோகெபேத், அம்ராம் தம்பதியினர் வைத்த விசுவாசம் அவர்களின் பயத்தை புறம்பாக்கியது. அவர்கள் தங்களின் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு, அரசர்களுக்கு பயப்பட்ட படியால் சரியான தீர்மானம் எடுத்தார்கள். இது அவர்களுக்கு கடவுள் மீது கொண்டுள்ள விசுவாசமும், தங்கள் குழந்தையின் மேல் வைத்துள்ள பாசமும் நிறைவேறுகிறது. எனவே அவர்களின் பயம் புறம்பாக்கப்பட்டது.

### 4. கீழ்ப்படியும் விசுவாசம்:

யோகெபேத் தங்கள் ராஜாவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படி இருந்தார். ஆனால் அதில் விசுவாசம் கலந்த தைரியத்துடன் கீழ்ப்படிந்து செயல்பட்டார் என்பது தான் உண்மை. யொகெபேத் தன்னுடைய குழந்தை வைக்கப்பட்ட பெட்டியை நதியோரமாய் நாணலுக்குள் வைத்தார். இதில் அவருடைய விசுவாசம் அதிகமாக இருக்கிறது. இங்கு பரந்து விருந்து இருக்கும் நைல் நதியில் இந்த இடத்தில் வைப்பது எகிப்தின் இளவரசி இங்கு குளிக்க வருவார் என்ற நம்பிக்கையும்,கடவுள் மீது கொண்டுள்ள விசுவாசத்தையும் காட்டுகிறது. தொடர்ந்து தனது குழந்தையைக் கவனிக்க தனது மகள் மிரியத்தை வைக்கிறார். மிரியாம் தூரத்தில் இருந்து குழந்தைக்கு என்ன நடக்கிறது என்று கவனித்துக்கொண்டிருந்தார். பார்வோனின் குமாரத்திகளின் கண்களில் குழந்தை கிடைத்தவுடன் மிரியாம் அங்கு சென்று இந்தப் பிள்ளையை வளர்ப்பதற்கு எபிரேய பெண்ணை அழைத்து வரட்டுமா என்று கேட்கிறார். இந்த செயல்பாடுகள் எல்லாம் யோகெபேத் கடவுள் மீது கொண்டுள்ள ஆழ்ந்து விசுவாசத்தை காண்பிக்கின்றது.



இந்த நிகழ்வின் மூலமாக கடவுளின் திட்டம், இஸ்ரவேல் மக்களின் விடுதலைக்கு மோசே உருவாக காரணமாயிருந்தது. இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு விசுவாசமுள்ள தாயாக நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**இறைப்பணியில்ஆயரம்மா.**

*Mrs.E.Nancy Baskar.*





ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல், தன் பாலகனை மறப்பாளோ? அவர்கள் மறந்தாலும், நான் உன்னை மறப்பதில்லை.

ஏசாயா 49:15

## WE ARE GOD'S CHILDREN

*(AND THE LORD ANSWERED) CAN A WOMAN FORGET HER NURSING CHILD, THAT SHE SHOULD NOT HAVE COMPASSION ON THE SON OF HER WOMB? YES, THEY MAY FORGET YET I WILL NOT FORGET YOU (ISAIAH 49:15)*

*ISAIAH 49:15 IS ANOTHER SCRIPTURE THAT NET REVEALS THAT OUR HEAVENLY FATHER DESIRES US TO COME TO HIM AS CHILDREN, IN THIS VERSE, THE LORD USED THE EXAMPLE OF NURSING MOTHERS AND HOW SHE TENDERLY CARES FOR AND HAS COMPASSION ON HER CHILD AND HIS NEEDS.*

*GOD IS NOT LIKE PEOPLE IF PEOPLE IN YOUR PAST HAVE HURT YOU, DON'T LET IT AFFECT YOUR RELATIONSHIP WITH THE LORD, YOU CAN TRUST, HIM, HE WILL CARE FOR YOU AS A LOVING FATHER.*

*WHEN WE DO NOT RECEIVE THE CARE AND LOVE THAT WE SHOULD IN OUR CHILDHOOD, IT CAUSES FEARS THAT WERE NEVER IN GOD'S PLAN FOR US, PARENTS ARE TO BE A MIRROR IMAGE IN THE PHYSICAL REALM OF WHAT OUR RELATIONSHIP WITH GOD IS TO BE LIKE IN THE SPIRITUAL REALM.*

## NOTHING CAN SEPARATE US

*MAY YOU'VE DONE SOMETHING SO TERRIBLE THAT'S YOU BELIEVE GOD CANNOT POSSIBLY LOVE YOU, THINK ABOUT THE UNFAITHFULNESS OF ISRAEL, NO MATTER HOW TREACHEROUS AND DISLOYAL SHE HAD BEEN JESUS NEVER FORGOT HIS COVENANT OF LOVE.*

*ARTICLE BY*

JENI

WOMEN'S Fellowship



# யாரை நீ துன்பப்படுத்துகிறாய் ???

கிருஸ்துவுக்குள் அன்பானவர்களே இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் ஸ்தோத்திரங்களை தெரிவித்துக்கொள்கிறேன் இந்த மாதத்தின் எல்லா ஆசிர்வத்தோடே கர்த்தர் நம்மை வழிநடத்துவராக.,

இப்போதும் கூட ஆண்டவர் நம்மை நோக்கி கூப்பிடுகிறார் ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய் என்று இந்த நாளிலே நாம் நம்மை சோதித்து பார்ப்போம் இயேசுவை நாம் எத்தனை முறை துன்பப்படுத்தி இருக்கிறோம் என்று வார்தைனாலோ அல்லது கரங்களினாலோ சிந்தைனாலோ அல்லது இருதயத்தினாலோ ஆண்டவரை நாம் துன்ப படுத்தியிருக்கிறோம்., நாம் கூட நினைத்து பார்க்கலாம் நான் ஆண்டவரை எப்போது துன்பப்படுத்தியிருக்கிறேன் என்று சவுல் இயேசுகிஸ்துவை துன்பப்படுத்துவில்லை மாறாக கிருஸ்த்துவர்களை துன்பபடுத்தினவன் ஆனால் இயேசு ஏன் என்னை துன்பப்படுகிறாய் என்று கேட்கிறார் சவுலை போலவே நாமும்கூட அநேகரை துன்பப்படுத்தி இருக்கலாம் ஆண்டவரால் படைக்கப்பட்ட எல்லோரும் அவருடைய ஆத்துமாக்கள் தான் அது யாராக இருந்தாலும் சரி நாம் யாரை துன்பப்படுத்தி இருக்கிறோம் என்று நம்முடை இருதயத்தை கேட்டுப்பார்ப்போம் ஊழியரையா அல்லது உடன் பணியாற்றுகிறவர்களா அல்லது உடன் நண்பர்களா அல்லது உடன் பிறந்தவர்களா நீங்கள் யாரை துன்பப்படுத்தி இருந்தாலும் அது இயேசுவை துன்பப்படுத்துகின்றது போலதான். ஆகவே தான் இயேசு சவுலை பார்த்து சொல்லுகிறார் (அப் :9:4) ல் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்பதாய்,



எனக்கு அன்பான கர்த்தருடைய பிள்ளைகளே சவுலை போலவே நாம் யாரையாகிலும் துன்பப்படுத்தி இருந்தாலும் இயேசுவைதான் துன்படுத்துகிறோம்.

நாம் யாரையும் குற்றப்படுத்துவோ அல்லது குறை சொல்லவோ தகுதியானவர்கள் அல்ல இயேசு ஒருவரே நீதியுள்ள நியாதிபதி அவரே நீதி செய்கிற தேவன் அவரவருக்கு தக்க பலனை அவரே தருகிறார் நன்மை செய்தால் நன்மை தீமை செய்தால் தீமை என்று, நாம் ஒருவரையும் குற்ற படுத்திக்கிறவர்கள் அல்ல காரணம் நாம் அனைவரும் மண்ணினால் உண்டாக்கப்பட்ட மனிதர்கள் ஆகவே தான் சவுலாகிய பவுல் சொல்லுகிறார் (கலத்தியர் :3:28)-ல் யூதனென்றும் இல்லை கிரெக்கென்றும் இல்லை நாம் எல்லோரும் நாம் எல்லோரும் கிறிஸ்துவுக்குள் ஒன்றாய் இருக்கிறோம் கிருஸ்த்து ஒருவரே நமக்கு தலையானவர் எனக்கன்பானவர்களே இனி அடிமைகளில்லை இயேசுகிறிஸ்துவின் பிள்ளைகள் (காலத்தியர் :4:7) நாம் மற்றவர்களை மனம் மாற்றுவோம் மாற்றம் முதலில் நம்மிடத்தில் இருந்து உருவாக்குவோம் கர்த்தர் தாமே நம்மையும், நம்முடைய குடும்பத்தையும் ஆசிர்வதிப்பாராக ஆமென்.

அசோக்குமார். சா

MEN'S
FELLOWSHIP



# பாவியாகிய என்மேல்

**"ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்" (லூக்கா 18:13).**

நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் பாவ அறிக்கை செய்கிற வழக்கமுள்ளவர்களாக இருந்தால் மட்டுமே ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர முடியும். பாவ அறிக்கை செய்யாதவர்களின் வாழ்க்கையில் அவர்கள் அநேக வேளைகளில் தங்கள் பாவ பழக்கவழக்கங்களில் எதாவது ஒரு விதத்தில் மாட்டிக்கொண்டிருக்கிறவர்களாகவே காணப்படுவார்கள். அவர்களுக்கு மெய்யான உணர்வு என்பது இருக்காது. இன்னும் சிலர், நான் என் ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆண்டவரை அநேக ஆண்டுகளாக அறிந்திருக்கிறேன், ஆகவே எனக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணம் அவர்களைத் தவறாய் வழிநடத்திவிடும். ஆகவே நான் இவ்விதமாக ஒரு அறிக்கையின் ஜெபத்தை செய்ய வேண்டிய அவசியமில்லை என்று எண்ணுகிற மனநிலையுள்ள அநேக விசுவாசிகளை நாம் இன்று பார்க்கிறோம். ஆனால் ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ள தேவ மனிதன் அல்லது ஆவிக்குரிய வாழ்க்கையில் தொடர்ந்து வளர்ந்து வருகின்ற மனிதனின் வாழ்க்கையில் ஆவிக்குரிய உணர்வு அதிகமாக இருக்கும். பரிசுத்த ஆவியானவர் அவர்களின் வாழ்க்கையில் எந்தெந்தப் பகுதிகளில் அவர்கள் தங்களைச் சரிப்படுத்த வேண்டும் என்று உணர்த்தும்போது அவர்கள் அதை உணர்ந்து கொண்டு தங்களைத் தாழ்த்தி தேவனுக்கு முன்பாக ஜெபிப்பார்கள்.






உதாரணமாக விசுவாசிகள் என்று சொல்லப்படுகிறவர்களின் வாழ்க்கையில் பெருமை சாதாரணமாக வெளிப்படும். ஆனால் அவர்கள் அதைக் குறித்து உணர்கிறவர்களாய் இருக்க மாட்டார்கள். ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலின் உணர்வு அவர்களில் இருப்பதில்லை. பரிசுத்த ஆவியானவர் அதைக் குறித்தும் உணர்த்தும் போதும் அவர்கள் அதை அற்பமாய் எண்ணி அலட்சியப்படுத்துவதும் உண்டு. இது ஆண்டவரை துக்கப்படுத்துகிறது என்ற மனவருத்தம் இல்லாதவர்களாய் வாழுவார்கள். பாவ அறிக்கை செய்கிற ஒரு வாழ்க்கையில் இன்னொரு முக்கியமான காரியம் என்னவென்றால், ஒரு நல்ல ஆவிக்குரிய முதிர்ச்சியுள்ள வளர்ச்சியைப் அவர்களில் பார்க்க முடியும். கிறிஸ்துவைப் போல வளருகிறவர்களாக இருக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துவார்கள். நம்முடைய வாழ்க்கையில் இடைவிடாமல் ஜெபிப்பதற்கு இவ்விதமான காரியங்கள் அதிக உதவியாய் இருக்கும்.

YOUTH FELLOWSHIP

# KINDER ARTICLE







**Teacher : Mrs. A. Jonish Herchil**


தென்னிந்திய தமிழ் திருச்சபை அல்யென்
C.S.I. TAMIL PARISH ALAIN, UAE
THE BOOK OF
Revelation
லெந்துகால
சிறப்பு தியான கூடுகை
6.00 AM TO 6.30 AM
40 day Spiritual Learning
வெளிப்படுத்தின விசேஷம்
Come join us!
zoom
You Tube
அன்பானவர்களே... லெந்துகால தியானத்தில் பங்குபெறும் அனைவரும் அந்தந்த நாளுக்குரிய திருமறைப்பகுதிகளை முன்கூட்டியே படிக்குமாறும், அத்துடன் ஒவ்வொரு நாளும் காலை 6:00 மணி முதல் 6:30 மணி வரை தியானம் நடைபெறும் போது, அனைவரும் ஜெபத்துடன் கலந்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

# C.S.I. - தமிழ் திருச்சபை - அல்-யென் -U.A.E.

## 40 நாள் லெந்துகால தியானம் - 2022

**Lenten Devotionals - 2022** **Timing - 6.00 amto 6.30 am**

| நாள் | தியான தலைப்பு வெளிப்படுத்தின விசேஷம் | திருமறைப் பாடம் |
|---|---|---|
| 02.03.2022<br>சாம்பல்புதன் | நான் அல்பாவும், ஒமெகாவும், ஆதியும் அந்தமுமாயிருக்கிறேன்" என்கிறார் கடவுளாகிய ஆண்டவர்.....<br>I am the Alpha and Omega. | வெளி 1:8 |
| 03.03.2022<br>வியாழன் | நீ காண்பவற்றை - (இனி நிகழவிருப்பவற்றையும்) எழுதி வை.<br>Write therefore, what you have been. | வெளி.1:19 |
| 04.03.2022<br>வெள்ளி | உன் செயல்களையும், கடின உழைப்பையும் மனவுறுதியையும் நான் அறிவேன்.<br>I know your deeds. | வெளி.2:2 |
| 06.03.2022<br>ஞாயிறு | உன் துன்பத்தையும், ஏழ்மையையும் நான் அறிவேன்.<br>I know your afflictions and your poverty. | வெளி. 2:9 |
| 07.03.2022<br>திங்கள் | என் வாயிலிருந்து வெளிவரும் வாள் கொண்டு அவர்களோடு போர் தொடுப்பேன்...<br>I... will fight against them with the sword of my mouth. | வெளி. 2:16 |
| 08.03.2022<br>செவ்வாய் | உள்ளங்களையும் இதயங்களையும் துருவி ஆய்கிறவர் நானே...<br>All the churchee will know that I am who searches | வெளி.2:23 |
| 09.03.2022<br>புதன் | ..எனவே விழிப்பாயிரு! உன்னில் எஞ்சியிருப்பதை உறுதிப்படுத்து<br>Wake up! Strengthen what remains. | வெளி.3:2 |
| 10.03.2022<br>வியாழன் | என் வாக்கை நீ கடைபிடித்தால் -சோதனைக் காலத்தில் நான் உன்னைக் காப்பாற்றுவேன்.<br>I will also keep you from the hour of trial. | வெளி.3:10 |
| 11.03.2022<br>வெள்ளி | நான் யார்மீது அன்பு செலுத்துகிறேனோ! அவர்களைக் கடிந்து தண்டித்துத் திருத்துகிறேன்...<br>Those whom I love, I rebuke and discipline, | வெளி.3:19 |
| 13.03.2022<br>ஞாயிறு | அழாதே! யூதா குலத்தில் சிங்கமும் தாவீதின் குலக்கொழுந்தும் வெற்றி பெற்றுவிட்டார்...<br>Do not weep... the root of David has triumphed.. | வெளி.5:5 |
| 14.03.2022<br>திங்கள் | எவ்வளவு காலம் உலகில் வாழ்வோருக்கு நீர் தீர்ப்பு வழங்காமல் இருப்பீர்?<br>How long sovereign Lord... avenge our blood? | வெளி.6:10 |
| 15.03.2022<br>செவ்வாய் | அவர்களது சினம் (கோபம்) வெளிப்படும் கொடிய நாள் வந்துவிட்டது...<br>For the great day of their wrath has come, and who can stand? | வெளி.6:17 |
| 16.03.2022<br>புதன் | புகை இறைமக்களின் வேண்டுதல்களோடுகூட கடவுள் திருமுன் எழும்பி சென்றது.<br>the prayers of the saints went up before God.. | வெளி, 8:4 |

**Lenten Devotionals - 2022** **Timing - 6.00 amto 6.30 am**

| நாள் | தியான தலைப்பு வெளிப்படுத்தின விசேஷம் | திருமறைப் பாடம் |
|---|---|---|
| 17.03.2022 வியாழன் | அந்தோ! ஊலகில் வாழ்வோருக்குக் கேடு வரும்! ஐயகோ! என்று கத்தக்கேட்டேன்... <br> Woe, Woe, Woe to the inhabitants of the earth... | வெளி 8:13 |
| 18.03.2022 வெள்ளி | வார்த்தைகளால் கொள்ளப்படாமல், எஞ்சிய மனிதர்கள் தங்கள் செயல்களைவிட்டு மனம் மாறவில்லை... <br> . they did not stop worshipping demons... | வெளி.9:20 |
| 20.03.2022 ஞாயிறு | மக்களினத்தார், நாட்டினர், மொழியினர், மன்னர்பற்றி நீ மீண்டும் இறைவாக்குறைக்க வேண்டும்... <br> Then I was told you must prophecy again... | வெளி.10:11 |
| 21.03.2022 திங்கள் | அனைவருக்கும் கைம்மாறு அளிக்கவும் உலகை ஆள்பவர்களை அழிக்கவும் காலம் வந்துவிட்டது... <br> The time has come for judging the deed... | வெளி. 11:18 |
| 22.03.2022 செவ்வாய் | குற்றம் சாட்டியவன் வெளியே தள்ளப்பட்டான்... . <br> who accuses them before our God... has been hurled down... | வெளி. 12:10 |
| 23.03.2022 புதன் | மக்கள் அப்பாம்பை வணங்கினார்கள் - அவ்விலங்கையும் வணங்கினார்கள்.... <br> Men worshipped dragon because he had given authority to the best.... | வெளி.13:14 |
| 24.03.2022 வியாழன் | விலங்கின் பெயரையோ.. என்னையோ குறியாகயிட்டு கொள்ளாத எவனாகிலும் விற்கவோ, வாங்கவோ முடியவில்லை... <br> ..so that no one could buy or sell unless he had the mark.... | வெளி.13:17 |
| 25.03.2022 வெள்ளி | இயேசுவின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் ளுக்கும இனமக்களுக்கு மன உறுதி தேவை... <br> This calls for patient endurance on the part of the saints... | வெளி. 14:12 |
| 27.03.2022 ஞாயிறு | நீர் ஒருவரே தூயவர் உம் நீதிச் செயல்கள் வெளிப்படையாயின... <br> For you alone are holy... your righteous acts have been revealed.. | வெளி. 15:4 |
| 28.03.2022 திங்கள் | உன் தீர்ப்புகள் உண்மையுள்ளவை நீதியானவை... <br> "Yes Lord God Almighty, true and just are your Judgments." | வெளி.16:7 |
| 29.03.2022 செவ்வாய் | "எல்லாம் நிறைவேற்றப்பட்டாயிற்று" என்று ஒரு பெரும் குரல் ஒலித்தது. <br> Out of the temple came a loud voice from the throne,"it is done." | வெளி. 16:17 |
| 30.03.2022 புதன் | அப்பெண்ணை இயேசுவின் சாட்சிகளுடைய இரத்தத்தையும் குடித்து வெறிகொண்டிருக்கக் கண்டேன்.... <br> I save that the woman was drunk with the blood of the saints. | வெளி. 17:6 |
| 31.03.2022 வியாழன் | ஒருதனப்பட்டவர்களாய்த் தங்கள் வல்லமையையும் அவ்விலங்கிடம் ஒப்படைத்தார்கள். <br> For God has put into their hearts to accomplish his purpose. | வெளி.17:13 |
| 01.04.2022 வெள்ளி | நீ கண்ட பத்துக் கொம்புகளும் விலங்கும், அவரை "கட்டெரிக் நெருப்பினால் சுட்டெரிக்கும். <br> The Beast and the ten horns you saw will hate. | வெளி.17:16 |

**Lenten Devotionals - 2022** **Timing - 6.00 amto 6.30 am**

| நாள் | தியான தலைப்பு வெளிப்படுத்தின விசேஷம் | திருமறைப் பாடம் |
|---|---|---|
| 03.04.2022<br>ஞாயிறு | கடவுள் நமது நோக்கத்தை நிறைவேற்ற அந்நாட்டினரின் உள்ளங்களை தூண்டிவிட்டார்.<br>They have one purpose. | வெளி. 17:17 |
| 04.04.2022<br>திங்கள் | அந்நகரைவிட்டு வெளியேறுங்கள்.<br>Come out of her, my people so that will not share in her sins. | வெளி.18:4 |
| 05.04.2022<br>செவ்வாய் | அவரது வேதனையைக் கண்டு அஞ்சி தொலைவிலேயே நின்ற வண்ணம் அழுது புலம்புவார்கள்....<br>They will weep and mourn and cry... The merchants who sold these things. | வெளி.18:5 |
| 06.04.2022<br>புதன் | கடவுள் உங்கள் நிமித்தம், அவருக்குத் தண்டனைத் தீர்ப்பு வழங்கினார்.<br>God had judged her for the way she treated you. | வெளி.18:20 |
| 07.04.2022<br>வியாழன் | அந்த ஆடை இறைமக்களின் நீதிச் செயல்களே...<br>Fine linen stands for the righteous acts of the saints.. | வெளி.19:8 |
| 08.04.2022<br>வெள்ளி | நான் உடன்பணியாளனே, கடவுளை மட்டுமே நீ வணங்கள் வேண்டும்...<br>"Do not do it", Worship God! | வெளி. 19:10 |
| 10.04.2022<br>ஞாயிறு | அவ்விலங்கு பிடிபட்டது. போலி இறைவாக்கினனும் அதோடு சேர்ந்து பிடிபட்டான்.<br>But the beast was captured and with him the false prophet. | வெளி.19:20 |
| 11.04.2022<br>திங்கள் | ஆயிரம் ஆண்டுகள் கிறிஸ்துவோடு ஆட்சி புரிந்தார்கள்.<br>They came to life and reigned with Christ for thousand years.... | வெளி. 20:4 |
| 12.04.2022<br>செவ்வாய் | அவர்கள் இரவு பகலாக என்றென்றும் வதைக்கப்படுவார்கள்.<br>They will be tormented day and night forever and ever. | வெளி.20:10 |
| 13.04.2022<br>புதன் | இறந்தேரின் செயல்கள் அந்நூலில் எழுதப்பட்டிருந்தன...<br>The dead were judged according to what they had done. | வெளி. 20:12 |
| 14.04.2022<br>வியாழன் | இதோ! நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்....<br>"I am making everything new". | வெளி.21:5 |
| 15.04.2022<br>புனித வெள்ளி | எல்லாம் வல்ல கடவுளாகிய ஆண்டவரும் ஆட்டுக்குட்டியுமே அதன் கோயில..,<br>the Lord God Almighty and the Lamb are its temple. | வெளி, 21:22 |
| 16.04.2022<br>சனி | இதோ! நான் விரைவில் வருகிறேன்...<br>Behold I am coming soon! My rewared is with me.. | வெளி. 22:12 |

# FEBRUARY

## Congratulations

| KIDS COLOURING | CODE WORD | WORD SEARCH | CROSS WORD | BIBLE QUIZ |
| --- | --- | --- | --- | --- |
| Smyrna Syntche | Jania Preni | Sherin Shah | Roshan | Shelbino Paul |
| Jesil Barnice | Johan Sanjo | Johan Sanjo | Johan Sanjo | Roshan |
| Jania Preni | Hazel Hartlyn | Roshan | Sherin Shah | |
| Johan Sanjo | Kariss Angelo | Eric Aaron | Eric Aaron | |
| Hazel Hartlyn | Sherin Shah | Jason Eric | | |
| Reagan Shan | Jason Eric | | | |
| Kariss Angelo | | | | |
| Chris Gabiriel | | | | |

**Well Done!**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject:** Your name / Quiz, type / Month - Year

**To Church Email:** csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

FIRST & SECOND

# TIMOTHY

## I & II தீமோத்தேயு



MARCH'22 - QUESTIONS

1. பவுல் எந்த பட்டணத்திற்கு போகும்போது எந்த பட்டணத்திற்காக ஜெபிக்கும் படி தீமொத்தேயுக்கு சொன்னார்?
2. பவுல் யாரை சாத்தானிடத்தில் ஒப்புவித்தார்?
3. புருஷர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று பவுல் விரும்புகின்றார்?
4. எப்படிப்பட்டவர் சீஷனாயிருக்கக்கூடாது?
5. எப்படிப்பட்ட மாதிரியாக இருக்க வேண்டும்?
6. யார் உயிரோடு செத்தவன்?
7. பவுல்- தீமோத்தேயுவை எதற்கு விலகி இருக்க சொன்னார்?
8. பவுல்- தீமோத்தேயுவை எதற்கு ஜாக்கிரதையாயிரு என்றார்?
9. பவுல் எந்த, எந்த பட்டணத்தில் துன்பங்களை சந்தித்தார்?
10. யாரை பவுல் எபேசுக்கு அனுப்பினார்




### பிப்ரவரி-2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. 1தெச :1:7 | 2. 1தெச:2:14 | 3. 1தெச:3:6 | 4. 1தெச:4:7 | 5. 1தெச:5:22 |
6. 2தெச:1:6 | 7. 2தெச:2:11 | 8. 2தெச:2:15 | 9. 2தெச:3:2 | 10. 2தெச:3:13

திருமதி.ஜோனீஷ் ஹெர்ஹெல், திருமதி. ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல்,
திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி,
திருமதி.பிப்லின் நெல்சன், செல்வி.அஜூன்ஷா, செல்வி.ஷெறின்ஷா, திருமதி.ஹெலன் கம்பீரம்,
திருமதி.அகஸ்டா லாரன்ஸ், திருமதி.ஜமுனா ராணி , திருமதி.பமீலா டேனியல்.

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

YOUR NAME / BIBLE QUIZ / JAN'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348

# KIDS COLOURING



PRIMARY

# ASH WEDNESDAY WORD SEARCH

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | L | E | W | W | N | F | K | Y | C | V | E | J | F | F |
| G | A | Y | P | O | S | H | N | D | S | F | N | Y | L | S |
| I | H | K | J | C | T | I | V | E | B | I | H | A | W | J |
| A | O | Y | E | N | A | W | Q | A | V | E | N | M | E | X |
| N | Y | C | D | T | M | R | J | X | Q | B | O | E | D | N |
| B | L | A | S | Z | U | C | H | D | X | A | L | Z | N | K |
| Q | I | B | C | G | S | F | A | S | T | W | O | E | E | T |
| L | A | T | O | S | C | L | P | I | H | P | F | W | S | L |
| G | U | D | O | P | D | F | O | R | E | H | E | A | D | S |
| N | S | R | C | R | Q | R | L | J | N | G | X | Y | A | O |
| B | C | N | G | R | E | C | E | S | J | V | V | U | Y | K |
| C | L | S | D | T | F | Q | N | R | E | P | E | N | T | Q |
| Z | L | L | S | L | E | U | T | D | W | Y | V | J | S | X |
| Z | H | A | S | H | E | S | E | D | F | L | K | V | F | Y |
| C | E | D | L | J | Y | M | C | V | V | I | K | W | V | W |

ABSTAIN
ASHES
BLESS
CROSS
EASTER
FAST
FOREHEAD
LENT
REPENT
WEDNESDAY



# UNSCRAMBLE LENT

Unscramble each set of letters to make words associated with Lent.

JUNIOR

1. PaSnd mylou ______________________

2. dMahyuTad nrysu ______________________

3. vPossrea ______________________

4. entL ______________________

5. YHkeelo W ______________________

6. IdaStualHyyor ______________________

7, rutmidu ______________________

8. ForoidGody ______________________

9. W yydnepdeaSs ______________________

10. osf yatayr ______________________

11. yWssAdene hda ______________________

12. day SransEeu ______________________



# Lenten Season



**Across**

**1.** "Restore unto me the joy of Thy ___________,and up hold with Thy free spirit."
**6.** "and lead us not into ____________, but deliver us from evil."
**8.** "Lord have ______, Christ have _____, Lord have ______." (one word)
**11.** On this Night Jesus instituted "a memorial" of his Passion in the Lord's Supper. _________ Thursday.
**12.** The word Septuagesima means _____ days before Easter.
**13.** "I, a poor, miserable ________,"
**15.** What is often practiced by individuals during the Lenten Season?
**17.** "Create in me a clean _________ O God,"
**20.** The color representing Good Friday is?
**28.** The Triduum consists of _____ days.
**29.** What word is not said during the Lenten season
**30.** "I said, I will ________ my transgressions unto the Lord.
**32.** The Day of Christ's Crucifixion. _____ Friday
**33.** "I acknowledge one Baptism for the remission of _______,"
**35.** "He __________ and was buried."
**36.** Traditionally we leave Good Friday service in ___________.
**40.** Lent is the season of _________
**41.** How many days are observed in Lent (not including Sundays)
**42.** The word Qunitagesima means ____ days before Easter.
**44.** The word Lent means?

**Down**

**2.** New ___________ that I give to you.
**3.** Pre-Lent focuses on this theme. (hint: free gift)
**4.** Palm Sunday is also known as Sunday of the ____________.
**5.** What comes after Lent? (2 words no space)
**7.** How many Sundays are "in" Lent but not "of" it.
**9.** "I believe in on God, the ___________ Almighty, maker of heaven and earth"
**10.** What is the "color" of the Lent season?
**14.** Easter is the day acknowledging Christ's ________.
**16.** "Sola Gratia" translated in english means? (2 words no space)
**18.** "and the lifting up of my hands as the evening __________!"
**19.** "So Jonah arose and went to _________, according to the word of the Lord."
**21.** "__________ be to the Father and to the Son and to the Holy Spirit.
**22.** Holy Week begins with ________ Sunday
**23.** "and was ___________ also for us under Pontius Pilate."
**24.** What is drawn on your forehead by Pastor on Ash Wednesday?
**25.** "Let my prayer be counted as ___________ before you,"
**26.** "Remember: You are _____ and to _____ you shall return" (one word)
**27.** Lent is "a time to reflect upon baptism, a time for rebirth and renewal in preparation for the celebration of _______."
**31.** What is the first day of Lent? (2 words no space)
**34.** The word Sexagesima means _____ days before Easter.
**37.** _______ one another as I have _______(ed) you. (one word)
**38.** Ashes come from ________(s) that were blessed on ______ Sunday the year before. (one word)
**39.** The day before Easter is called Easter _____.
**43.** "And the ______ day He rose again according to the Scriptures"

SENIOR
& above


Confirmation Service
திடப்படுத்தல் ஆராதனை
12 MAR 2022
THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA
Rt. Rev. Timothy Ravinder
Coimbatore - bishop


VBS
starts on
28.03.2022


May-2022
Bible
QUIZ
The Book of Isaiah [ஏசாயா ]
zoom




## How it Works




**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.

Happy Birthday

# March

| | |
|---|---|
| 1-Mar | Mr. David Livingston |
| 2-Mar | Mrs. Vasantha Selva Kumari W/o Mr. David raj |
| 2-Mar | Mrs. Shaly Jesie W/o Mr. Melbin Paul |
| 3-Mar | Mrs. M.Subha Alvin W/o Mr. Alvin Kumar |
| 3-Mar | Mrs. Yesubai W/o Mr. David Sorna Balan |
| 4-Mar | Mr. Libin Raj S/o Mr. Pushparaj |
| 6-Mar | Mr. Derick Gasbath Joy |
| 6-Mar | Mr. Hebin Jose George |
| 14-Mar | Mrs. Radhika Grace W/o Mr. Selva Kumar |
| 15-Mar | Mrs. Eben A.Prasad W/o Mr. Ashok Prasad |
| 16-Mar | Mrs.Bhuvaneshwari C/o Mr. Daniel Durai Singh |
| 17-Mar | Mr. D.P.Joseph Jovin S/o Mr. Deva Prakash |
| 17-Mar | Mrs.R.Jackulin Milka W/o Mr. Havin Heba |
| 19-Mar | Mr. A.S.Kannan |
| 23-Mar | Mr. Gabrilin U.S.Shasmitha D/o Mr. Ujin Raj |
| 23-Mar | Mrs. Aji Kumari W/o Mr. Robert Wilson |
| 24-Mar | Mr. Lifin Raj.p S/o Mr. Pushparaj |
| 25-Mar | Mrs. Rebecca W/o Mr. Prabhu Dinesh Kumar |
| 27-Mar | Mstr. Johan Sanjo S/o Mr. Belfer John |
| 27-Mar | Mstr. Jeroan Stanly S/o Mr. Stanly |
| 28-Mar | Ms. Eastrine Benedicta Raj S/o Mr. Saman Rajkumar |
| 28-Mar | Mstr. Ridhun Yojit S/o Mr. Sathish Kumar |
| 29-Mar | Mr. Antony Helvin Gerald |
| 30-Mar | Mr. Ajin Shah S/o Mr. Selvsiter Solomon |
| 30-Mar | Mr. D.L.Derin S/o Mr. David Livingston |
| 30-Mar | Ms. Efren Joan D/o Dr. Pradeev |
| 31-Mar | Ms. Annlin Sophia D/O Mr. Nelson Sopitha Raj |

## Happy Anniversary

7th Mar - Mr. Ujin Raj & Mrs. Sangeetha

# LENT DAYS

**A SEASON OF REFLECTION, RENEWAL, AND PREPARATION**



**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**